# யூன் – 19 – புதன்

**புனித ரோமுவால்து**

**“குறைவாக விதைப்பவர் குறைவாக அறுவடை செய்வார்” 2 கொரிந்தியர் 9:6**

---

## முதல் வாசகம் : 2 கொரிந்தியர் 9 : 6 – 11

சகோதரர் சகோதரிகளே! குறைவாக விதைப்பவர் குறைவாக அறுவடை செய்வார். நிறைவாக விதைப்பவர் நிறைவாக அறுவடை செய்வார். இதைத் தெரிந்து கொள்ளுங்கள். ஒவ்வொருவரும் தம்முள் தீர்மானித்தபடியே கொடுக்கட்டும். மனவருத்தத்தோடோ கட்டாயத்தினாலோ கொடுக்க வேண்டாம். முகமலர்ச்சியோடு கொடுப்பவரே கடவுளின் அன்புக்கு உரியவர்.கடவுள் உங்களை எல்லா நலன்களாலும் நிரப்ப வல்லவர். எந்தச் சூழ்நிலையிலும் எப்போதும் தேவையான தெல்லாம் உங்களுக்குத் தருவார் அனைத்து நற்செயல்களையும் செய்வதற்குத் தேவையானதெல்லாம் உங்களுக்கு மிகுதியாகவே தருவார்.”ஒருவர் ஏழைகளுக்கு வாரி வாரி வழங்கும்போது அவரது நீதி என்றென்றும் நிலைத்திருக்கும்” என்று மறைநூலில் எழுதியுள்ளது அல்லவா!விதைப்பவருக்கு விதையையும், உண்பதற்கு உணவையும் வழங்குபவர், விதைப்பதற்கு வேண்டிய விதைகளை வழங்கி அவை முளைத்து வளரச் செய்து அறச் செயல்களாகிய விளைச்சலை மிகுதியாகத் தருவார்.நீங்கள் எல்லா வகையிலும் செல்வர்களாகி வள்ளன்மை மிகுந்தவர்களாய் விளங்குவீர்கள். இவ்வாறு எங்கள் பணிவழியாய்ப் பலர் கடவுளுக்கு நன்றி செலுத்துவர்.

**பதில்பாடல் :** ஆண்டவருக்கு அஞ்சி நடப்போர் பேறுபெற்றோர்

## நற்செய்தி : மத்தேயு 6 : 1 – 6, 16 - 18

அக்காலத்தில் இயேசு தம் சீடரை நோக்கிக் கூறியதாவது :மக்கள் பார்க்க வேண்டுமென்று அவர்கள்முன் உங்கள் அறச் செயல்களைச் செய்யாதீர்கள். இதைக் குறித்து நீங்கள் எச்சரிக்கையாய் இருங்கள். இல்லையென்றால் உங்கள் விண்ணகத் தந்தையிடமிருந்து உங்களுக்குக் கைம்மாறு கிடைக்காது.நீங்கள் தர்மம் செய்யும்போது உங்களைப்பற்றித் தம்பட்டம் அடிக்காதீர்கள். வெளிவேடக்காரர், மக்கள் புகழவேண்டுமென்று தொழுகைக் கூடங்களிலும் சந்துகளிலும் நின்று அவ்வாறு செய்வர். அவர்கள் தங்களுக்குரிய கைம்மாறு பெற்றுவிட்டார்கள் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன். நீங்கள் தர்மம் செய்யும்போது, உங்கள் வலக்கை செய்வது இடக்கைக்குத் தெரியாதிருக்கட்டும்.அப்பொழுது நீங்கள் செய்யும் தர்மம் மறைவாயிருக்கும் மறைவாய் உள்ளதைக் காணும் உங்கள் தந்தையும் உங்களுக்குக் கைம்மாறு அளிப்பார்.நீங்கள் இறைவனிடம் வேண்டும்பொழுது வெளிவேடக் காரரைப்போல் இருக்கவேண்டாம். அவர்கள் தொழுகைக் கூடங்களிலும் வீதியோரங்களிலும் நின்றுகொண்டு மக்கள் பார்க்க வேண்டுமென இறைவேண்டல் செய்ய விரும்புகிறார்கள். அவர்கள் தங்களுக்குரிய கைம்மாறு பெற்றுவிட்டார்கள் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்.ஆனால் நீங்கள் இறைவனிடம் வேண்டும் பொழுது உங்கள் உள்ளறைக்குச் சென்று, கதவை அடைத்துக் கொண்டு, மறைவாய் உள்ள உங்கள் தந்தையை நோக்கி வேண்டுங்கள். மறைவாய் உள்ளதைக் காணும் உங்கள் தந்தையும் உங்களுக்குக் கைம்மாறு அளிப்பார்.மேலும் நீங்கள் நோன்பு இருக்கும்போது வெளிவேடக்காரரைப் போல முகவாட்டமாய் இருக்க வேண்டாம். தாங்கள் நோன்பு இருப்பதை மக்கள் பார்க்கவேண்டுமென்றே அவர்கள் தங்கள் முகங்களை விகாரப்படுத்திக் கொள்கிறார்கள். அவர்கள் தங்களுக்குரிய கைம்மாறு பெற்றுவிட்டார்கள் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்.நீங்கள் நோன்பு இருக்கும்போது உங்கள் தலையில் எண்ணெய் தேய்த்து, முகத்தைக் கழுவுங்கள்.அப்பொழுது நீங்கள் நோன்பு இருப்பது மனிதருக்குத் தெரியாது மாறாக. மறைவாய் இருக்கிற உங்கள் தந்தைக்கு மட்டும் தெரியும். மறைவாய் உள்ளதைக் காணும் உங்கள் தந்தையும் உங்களுக்கு ஏற்ற கைம்மாறு அளிப்பார்” என்றார்.

**தியானம்:** இன்றைய நற்செய்தி உள்ளார்ந்த மனிதனைக் குறித்து ஆராய எம்மை அழைப்பது மட்டுமல்ல அவர்களது தேவைகளில் நாம் எவ்வாறு நடந்து கொள்கின்றோம்? என விணாவுகின்றது. விண்ணகத் தந்தையோடான எமது உறவு எவ்வாறு இருக்க வேண்டுமெனவும் கற்பிக்கின்றது. எனவே, எமது உள்ளார்ந்த மனிதனை நாம் ஆராய்வதோடு மட்டும் நின்றுவிடாது, நெருங்கி வரும் இறையாட்சியில் தகுதிபெற நற்செய்தியை நம்பவேண்டிய கட்டாயத்தினையும் ஏற்றுக்கொள்வோம். ஆண்டவர் இயேசு “நீங்கள் இறைவனிடம் வேண்டும் பொழுது உங்கள் உள்ளறைக்குச் சென்று, கதவை அடைத்துக்கொண்டு, மறைவாய் உள்ள உங்கள் தந்தையை நோக்கி வேண்டுங்கள். மறைவாய் உள்ளதைக் காணும் உங்கள் தந்தையும் உங்களுக்குக் கைம்மாறு அளிப்பார்“ (மத்தேயு6:6). நாம் எமது பரலோக தகப்பனிடம் எவ்வாறு செபிக்க வேண்டுமென கற்றுத் தருவதால், எமது செபித்தல் குறித்து நாம் விசேட கவனம் செலுத்துவதோடு, செபித்தலுக்கென நேரத்தினை ஒதுக்கி இறையருளை வேண்டிட அழைக்கப்பட்டுள்ளோம். இதனையே “ஆண்டவருக்கு அஞ்சிநடப்போர் பேறுபெற்றோர். அவர் தம் கட்டளைகளில் அவர்கள் பெருமகிழ்வடைவர்” (திருப்பாடல்112:1) எனக்கற்பிப்பதோடு இறையருளை நாடிநிற்க எம்மை வலியுறுத்துகின்றது. எனினும் கணணி யுகத்தில் வாழும் நாம் எமது மனமாற்றத்திற்கு ஏதுவாக இறைவார்த்தைகளை உள்வாங்கி வாழுகின்றோமா? ஏனெனில் நாம் மனம்திரும்பி, அபயக்குரல் எழுப்பியவர்களாக தம்மை நோக்கி வரவேண்டுமென இறைவன் விரும்புகின்றார் என்று இறைமகன் இயேசு இன்றைய நற்செய்தியில் போதித்திருக்கின்றாரோ எனவும் எம்மை வேறுவிதமாகச் சிந்திக்கவும் அழைக்கின்றன. ஆதலால், நாம் கடந்த காலங்களில் எப்படி வாழ்ந்தோம் என்பதல்ல முக்கியம். இனிமேல் எவ்வாறு வாழப்போகின்றோம் என்பதே முக்கியமாகும். இன்றைய இறைவார்த்தைகள் இறைவனது வல்லமையையும், அவரது கிருபை நிறைந்த மன்னிக்கும் கருணையையும் தெளிவுபடுத்துகின்றது. ஏனெனில் பாவத்தோடு வாழுபவனுக்கு மன்னிப்பு உண்டு. ஆனால் பாவத்தோடு மரிப்பவனுக்கு மன்னிப்பு இல்லை என்பது மட்டுமல்ல நித்திய நரகமும் நிட்சயிக்கப்பட்டுள்ளது. எனவே விசுவாசத்தின் ஆண்டெனப் பிரகடணம் செய்யப்பட்டுள்ள இந்நாட்களில் எமது உள்ளார்ந்த மனிதனை ஆராய்வோம்.